+-+-+-வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- சரவண குமார்

தேதி 21.7.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்ற மழை காலக் கூட்டத் தொடரின் தொடக்க நாளான இன்று எதிர்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளும், நாளைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டன.

இந்தியா, உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் திசையில் வேகமாக பயணித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கப்பல் மூலமான சரக்கு அனுப்புகை ஆவணங்கள் பற்றிய, Bills of Lading மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்

நாடாளுமன்றம்

நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்கி உள்ளது. இக்கூட்டத் தொடர் 21 அமர்வுகளாக, ஆகஸ்ட் 21-ஆம் தேதி வரை நடைபெறும்.

கூட்டத் தொடரின் தொடக்க நாளான இன்று, மக்களவையில், பகல்ஹாம் தீவிரவாத தாக்குதல் மற்றும் ஏர்-இண்டியா விமான விபத்தில் பலியானவர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பல்வேறு மாநிலங்களில் இயற்கை சீற்றங்களால் ஏற்பட்ட உயிர் மற்றும் உடமைச் சேதங்கள் குறித்து துயரம் வெளியிடப்பட்டது. சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெற்றிகரமாகப் பயணம் மேற்கொண்டு திரும்பி உள்ள இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லாவிற்கு, மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லா மற்றும் உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

மாநிலங்களவையில், பாரதிய ஜனதாவைச் சேர்ந்த திரு கனாட் புர்காயஸ்தா உட்பட 2 புதிய உறுப்பினர்களுக்கும், சி சதானந்தன் மாஸ்டர் உட்பட 3 நியமன உறுப்பினர்களுக்கும், அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அமர்விடைக் காலத்தில் காலமான 7 முன்னாள் உறுப்பினர்களுக்கும் மாநிலங்களவையில் இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இரு அவைகளிலும், பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, அலுவல்கள், நாளை வரை ஒத்தி வைக்கப்பட்டன. இரு அவைகளும் முதலில் நண்பகல் 12 மணி வரையிலும் தொடர்ந்து மக்களவை, பிற்பகல் 2 மணி மற்றும் 4 மணி வரையிலும் ஒத்தி வைக்கப்பட்டது. விவாதங்களுக்கு, அரசு தயாராகவே உள்ளதாக நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு, அமளிக்கு இடையிலேயே அவையில் கூறினார். பாதுகாப்பு

அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இதே கருத்தை வலியுறுத்தினார். பிற்பகல் 4 மணிக்கு அவை மீண்டும் கூடிய சமயத்திலும் அமளி நீடித்ததால், சபாநாயகர் அவையின் அலுவல்களை நாளை வரை ஒத்தி வைத்தார்.

மோடி-நாடாளுமன்றம்

நாடாளுமன்ற கூட்டத் தொடர் தொடங்கும் முன்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், இக்கூட்டத் தொடர், வளமான விவாதங்களுடன், ஜனநாயகத்தை வலுப்படுத்தக் கூடியதாக, ஆக்கப்பூர்வ விதத்தில் அமையும் என நம்பிக்கை வெளியிட்டார். நாடாளுமன்றத்தின் மழைக்காலக் கூட்டத்தொடர், நாட்டிற்கே பெருமிதத் தருணமாகவும் கூட்டு சாதனைகளின் நிஜமான கொண்டாட்டமாகவும், திகழ்வதாக அவர் கூறினார். ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின் போது இந்தியாவின் ராணுவ வல்லமையை உலகமே கண்டதாகவும், இந்நடவடிக்கையால் உலகின் கவனம், தீவிரவாதம் மற்றும் அதன் குவி மையத்தின் மீது திரும்பி இருப்பதாகவும் பிரதமர் கூறினார். இந்தியாவின், டிஜிட்டல் இண்டியா முன் முயற்சிகள் உலக அளவில் கவனத்தை ஈர்த்து வருவதாகவும் இந்தியாவின் யுபிஐ டிஜிட்டல் பண பரிமாற்ற வசதிகள் உலகின் பல்வேறு நாடுகளில் பிரபலம் அடைந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். 2014-ஆம் ஆண்டிற்கு முன்னர் உலகின் 10-ஆவது பொருளாதாரமாக திகழ்ந்த இந்தியா, தற்போது உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் திசையில் வேகமாக பயணித்து வருவதாக அவர் கூறினார். பிரதமரின் பேட்டி குறித்து கூடுதல் விவரங்கள் ..........

(வாய்ஸ்)

மோடி-நாடாளுமன்றம்

(வாய்ஸ்)

நாட்டில் நக்சல் வாதம் மற்றும் மாவோயிசத்தின் தாக்கம் தற்போது வேகமாக குறைந்து வருவதாகவும், நக்சல் வாதத்தால் பாதிக்கப்பட்ட பல மாவட்டங்கள் தற்போது வளர்ச்சி மையமாக மாறி வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார். பாதுகாப்புத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகளுக்கு முக்கியத் துவம் அளிக்கப்படுவதால் இளைஞர்களுக்கான வேலை மற்றும் புதுமையாக்க வாய்ப்புகள் அதிகரிக்கும் என அவர் கூறினார்.

அண்மையில், சர்வதேச அமைப்புகளுக்கு இடையிலான உச்சி மாநாட்டில் இந்தியா எட்டி உள்ள சாதனைகள் குறித்து பிரதமர் பேசுகையில், தற்போது இந்தியாவில் 90 கோடி தனி நபர்கள் சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளதாகவும், மழைக் காலத்தில் அதிகம் ஏற்படக் கூடிய டிரக்கோமா என்னும் **கண் நோய் இல்லாத** நாடாக உலக சுகாதார அமைப்பு இந்தியாவை அறிவித்து இருப்பதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தின் மழைக் காலக் கூட்டத் தொடரில் அலுவல்கள் சுமுகமான முறையில் அமைய அனைத்துக் கட்சி எம்பிக்களும் அரசுடன் ஒத்துழைக்க வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக் கொண்டார்.

*லோக் சபா பணவீக்கம்*

நீடித்த வேலை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலமாகவும், வீட்டு அளவிலான வருமானத்தை உயர்த்துவதன் வாயிலாகவும், பணவீக்கத்தை கட்டுப்படுத்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறி உள்ளார். இன்று மக்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதைத் தெரிவித்தார். அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் அவசர கால கையிருப்பை அதிகரிக்க, அரசு முடிவெடுத்து கொள்முதல் செய்யப்பட்ட தானியங்கள் வெளிச் சந்தையில் விற்கப்பட்டதாகவும், குறிப்பிட்ட உணவுப் பண்டங்களை சலுகை விலையில் விற்கும் வசதிகளை அரசு உருவாக்கி இருப்பதாகவும் கூறினார். இத்தகைய பல்வேறு முயற்சிகள் காரணமாக கடந்த நிதியாண்டில் சில்லறை விலை பணவீக்கம் 4.6 சதவிகிதமாக குறைந்து இருப்பதாகவும், முந்தைய 6 ஆண்டுகளில் இதுவே மிக குறைந்த விகிதம் என்றும் அவர் கூறினார்.

*மாநிலங்களவை-கப்பல்*

கப்பல் மூலமான சரக்கு **அனுப்புகை ஆவணங்கள்** பற்றிய, 2025-ஆம் ஆண்டு Bills of Lading மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்களவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட இம்மசோதா, இன்று மாநிலங்களவையிலும், விவாதங்களுக்கு பின்னர் நிறைவேற்றப்பட்டது. 2047-ஆம் ஆண்டிற்குள் கப்பல் கட்டுமானத் துறையில் உலகின் 5 பெரிய நாடுகளில் ஒன்றாக இந்தியாவை மேம்படுத்தும் இலக்குடன் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு

வருவதாக மத்திய கப்பல் துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனோவால் விவாதங்களுக்கு பதில் அளிக்கையில் கூறினார். துறைமுகங்களின் நவீனமயம் மற்றும் திறன் மேம்பாடு தொடர்பான சாகர் மாலா திட்டத்தின் கீழ் 805 திட்டப் பணிகள் இனம் காணப்பட்டு, மொத்தம் 5.5 லட்சம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்தார். தற்போது நாட்டின் அனைத்து பெரிய துறைமுகங்களும், ரயில்வே மற்றும் சாலை கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். முன்னதாக மசோதாவை அமைச்சர் அவையில் தாக்கல் செய்ததைத் தொடர்ந்து, பிஜேபி உறுப்பினர் திரு சம்பு சரண் பட்டேல், விவாதங்களை தொடக்கி வைத்துப் பேசினார். புதிய மசோதா மூலம் நாட்டில் வர்த்தகம் புரிவதில், வெளிப்படைத் தன்மை மேம்படும் என்று அவர் தெரிவித்தார். அஇஅதிமுக உறுப்பினர் டாக்டர் எம் தம்பிதுரை பாரதிய ஜனதாவை சேர்ந்த திரு அருண் சிங் உட்பட பல்வேறு உறுப்பினர்களும் விவாதங்களில் பங்கேற்று பேசினர்.

*ரங்கசாமி*

புதுச்சேரியில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, தேர்தலின் போதும் ஆட்சி அமைந்த பிறகும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார். புதுச்சேரியில் இன்று இணையவழியில் நடைபெற்ற, என்ஆர் காங்கிரஸ் உறுப்பினர் சேர்க்கை நிகழ்ச்சியை தொடக்கி வைத்துப் பேசிய அவர் தமது அரசு எல்லாத் தொகுதிகளுக்கும் நிதி ஒதுக்கிக் கொடுத்து திட்டங்களை செயல்படுத்தி வருவதாக கூறினார். நிர்வாகத்தில்

குழப்பங்களைத் தவிர்த்து, மக்கள் நலத் திட்டங்களை விரைந்து செயல்படுத்தவே மாநில அந்தஸ்து கோரப் படுவதாகவும், கட்சி, இதைத் தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் அவர் தெரிவித்தார்.

கட்டிட அனுமதி

புதுச்சேரியில் அனுமதி இல்லாத கட்டிடங்கள் மற்றும் விதிமீறல் கட்டிடங்களுக்கான ஒழுங்குமுறை திட்டத்தை அரசு அறிவித்துள்ளது. இதுகுறித்து கூடுதல் விவரங்கள்.............

(வாய்ஸ்)

(வாய்ஸ்)

அனுமதி இல்லாத கட்டிடங்கள் மற்றும் விதிமீறல் கட்டிடங்களுக்கான ஒழுங்குமுறை திட்டதின் கீழ் ஒழுங்குமுறை கோரும் விண்ணப்பங்களை, உரிய கட்டணம் மற்றும் ஆவணங்களுடன் இணையதளம் மூலமாக சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ஒரு முறை மட்டுமே வழங்கப்படும் இந்த வாய்ப்பை பொது மக்கள் நன்கு பயன்படுத்திக் கொண்டு, மின்சார துண்டிப்பு போன்ற தண்டனை நடவடிக்கைகளை தவிர்த்துக் கொள்ளலாம் என்றும் புதுச்சேரி அரசு, செய்தி குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடியிருப்புகளுக்கான ஒழுங்குமுறை விண்ணப்பக் கட்டணம், 5 ஆயிரம் ரூபாயாகவும், குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கான விண்ணப்ப கட்டணம் 10 ஆயிரம் ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கலப்பு பயன்பாடு மற்றும் சிறப்பு வகை கட்டிடங்களுக்கு ஒழுங்குமுறை

கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. கூடுதல் விவரங்களுக்கு, புதுச்சேரி நகர அமைப்புக் குழுமத்தின் இணைய தளத்தையும், நகர மற்றும் கிராம அமைப்புத் துறையின் இணைய தளத்தையும் அணுகலாம்.

*மணக்குள விநாயகர்*

புதுச்சேரியில் மணக்குள விநாயகர் கோவில் வளாகம் முழுவதிலும், பக்தர்களின் வசதிக்காக குளிர்சாதன வசதி ஏற்படுத்துவதற்கான மொத்தச் செலவில் மூன்றில் ஒரு பகுதியாக யுகோ வங்கியின் பிரதான கிளை வழங்கும் 11 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை வங்கியின் மண்டல மேலாளர், இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமியிடம் ஒப்படைத்தார். தொடர்ந்து கோவில் நிர்வாக அதிகாரியிடம், முதலமைச்சர் இக்காசோலையை வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில், சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித் துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின் போது, வங்கி அதிகாரிகள் மற்றும் திருக்கோவில் பணியாளர்கள் உடன் இருந்தனர். மணக்குள விநாயகர் கோவில் முழுவதிலும், வரும் ஆகஸ்டு மாதத்திற்குள் குளிர் சாதன வசதி ஏற்படுத்தப்படும் என்றும், இதற்கான மொத்த செலவில் நன்கொடை போக எஞ்சிய தொகை, கோவில் நிதியிலிருந்து வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.ளு

*சிவாஜி கணேசன்*

செவாலியே சிவாஜி கணேசன் நினைவு நாள் இன்று புதுச்சேரியில், அரசு சார்பில் அனுசரிக்கப்பட்டது. கிழக்கு கடற்கரை சாலை-கருவடிக்குப்பம் சாலை சந்திப்பில் உள்ள சிவாஜி கணேசன் திருவுருவச் சிலைக்கு சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், பொதுப் பணித்துறை அமைச்சர் திரு லட்சுமி நாராயணன், துணை சபாநாயகர் திரு ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர் திரு பாஸ்கர் என்கிற தட்சிணாமூர்த்தி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

*வானிலை*

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வரும் 27-ஆம் தேதி வரை தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் நீலகிரி, தென்காசி, தேனி, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்டங்கள், மற்றும், கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகளில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றுக்கு வாய்ப்பு அதிகம் உள்ள தமிழக கடலோரப் பகுதிகள், வங்க கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு, மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக, குமரி மாவட்டம் சிற்றாரில், 5 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

பணப் பறிமுதல் விவகாரம் தொடர்பாக நீதிபதி யஷ்வந்த் வர்மா-வை, அரசியல் சாசன விதிகளின் கீழ் பதவி நீக்கம் செய்யக் கோரி, 145 எம்பிக்கள் மக்களவை தலைவர் திரு ஓம் பிர்லாவிடம் கூட்டாக மனு கொடுத்துள்ளனர். பிஜேபி, காங்கிரஸ், தெலுங்கு தேசம், ஜேடி-யு, ஜேடி-எஸ், சிபிஎம் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் இதில் அடங்குவர். திரு அனுராக் தாக்கூர், திரு ரவிசங்கர் பிரசாத், திரு ராஜீவ் பிரதாப் ரூடி ஆகிய பிஜேபி நாடாளுமன்ற உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி, தேசிய வாத காங்கிஸ் எஸ்சிபி பிரிவைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுப்ரியா சுலே ஆகியோரும் கூட்டு மனுவில் கையெழுத்திட்டுள்ளனர். நீதிபதி யஷ்வந்த் வர்மாவின் வீட்டில் இருந்து ரொக்க பணம் கைப்பற்றப்பட்டது குறித்து நாடாளுமன்றம் விசாரிக்கும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்ற மழை காலக் கூட்டத் தொடரின் தொடக்க நாளான இன்று எதிர்கட்சிகளின் அமளி காரணமாக இரு அவைகளும், நாளைய தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டன.

இந்தியா, உலகின் 3-ஆவது பெரிய பொருளாதாரமாக மேம்படும் திசையில் வேகமாக பயணித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

கப்பல் மூலமான சரக்கு அனுப்புகை ஆவணங்கள் பற்றிய, Bills of Lading மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

புதுச்சேரியில் உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றி வருவதாக முதலமைச்சர் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

---------------------------